மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அ.வ.எண். 201/2011

14.08.2018

**பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டுள்ளார்.**

18,20 ,34 முதல் 37 வரையிலான பிரதிவாதிகள் **தரப்பு குறுக்கு விசாரணை**

18 ம் பிரதிவாதி சாமியப்பன் என்ன எதிர்வாதம் செய்து வருகிறார் என்று எனக்குத் தெரியாது. என் வழக்கறிஞரிடமும் இது குறித்து நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. அவர் கடந்த 29.09.2010 ம் தேதியில் தாவா சொத்து அடங்கிய காலைகளில் பொதுவில் பு.ஏ.2.19 ½ செண்ட் இடத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. அவர் கிரயம் வாங்கிய போது தாவா சொத்துக்கள் அடங்கிய காலைகள் முழுவதையும் குறிப்பிட்டுத் தான் பொதுவில் கிரயம் பெற்றுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்கள் நாளது வரை வாரிசுகளுக்குள் பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் இருப்பதால் தான் 18 ம் பிரதிவாதி பொதுவில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 18 ம் பிரதிவாதி செய்து வரும் எதிர்வாதம் மற்றும் அவர் செய்து கொண்ட கிரயம் ஆகியவற்றை ஒப்புக்கொண்டால் எங்கள் தரப்பு வழக்கு பாதிக்கப்பட்டு விடும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. வழக்கில் 20 ம் பிரதிவாதி பொன்னுச்சாமியை தெரியாது. அவரது சகோதரர் கோவிந்தசாமி என்பரையும் தெரியுமா என்றால் எனது தகப்பனாருக்குத் தான் தெரியும். கோவிந்தசாமி இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளிடமிருந்து 18 ம் பிரதிவாதி பொதுவில் கிரயம் பெற்றுள்ளது எனக்குத் தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 18 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்கள் நீங்களாக மீதி உள்ள பாதி பாத்தியம் உள்ள சொத்து 20 ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 15 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார் என்றால் அது பற்றி எனது தகப்பனாருக்குத் தான் தெரியும். 34 முதல் 37 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி 15 ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 34 முதல் 37 பிரதிவாதிகள் தாவா சொத்துக்கள் பொதுவில் இருந்ததாகத் தான் எதிர்வாதம் செய்திருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வாய்மொழி கறார் எதுவும் நடைபெறாததால் மேற்கண்ட பிரதிவாதிகள்

சொத்துக்கள் பொதுவில் இருப்பதாக எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல வாய்மொழி கறார் நடைபெற்றது. 26ம் பிரதிவாதி எனது தகப்பனார் 2000ம் வருடத்தில் பொது அதிகாரப்பத்திரம் எழுதி பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தில் நடைபெறாத வாய்மொழி கறார் நடந்ததாக பொய்யாக குறிப்பிட்டு எழுதப்பட்டதாகச் சொன்னால் சரியல்ல. 27 முதல் 33 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் பெற்ற கிரயங்கள் ஏற்றுக்கொள்ளுபடியான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் எழுதிக் கொடுத்த கிரயங்கள் குறிப்பிட்ட செக்குபந்திகள் கண்டு எழுதிக்கொடுத்துள்ள நிலையில் மேற்கண்ட கிரயங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொதுவில் பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 27 முதல் 33 வரையிலான பிரதிவாதிகள் பெற்ற கிரயம் மேற்கண்ட பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு தனித்தனியாக பட்டா பெற்று அனுபவித்து வருவதாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**/ஒம்/ கா.பாரதி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**காங்கயம்.**